**செய்திவெளியீடுஎண்:549** **நாள்:28.08.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

சட்டம் தொடர்புடைய துறைகளில் இந்திய மொழிகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள தன்னார்வ அமைப்புகளுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

2. இந்திய அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ள மொழி எதிலும் பின்வரும் பணி எதனையும் புரிந்து வருகிற அத்தகைய அமைப்புகளுக்கு மானியம் கிடைக்கத்தக்கதாகும், அவையாவன:-

(i) மூலமுதலான சட்டப் புத்தகங்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்,

(ii) தரமான சட்டப் புத்தகங்கள் அல்லது செம்மொழி இலக்கியங்களை மொழிபெயர்ப்பு செய்தல் மற்றும் வெளியிடுதல்,

(iii) சட்டச் சொல்லகராதியினைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்,

(iv) சட்டப் பத்திரிக்கைகளை வெளியிடுதல்,

(v) சட்டம் தொடர்புடைய துறைகளில் இந்தி அல்லது மாநிலங்களின் பிற ஆட்சிமொழிகளை மேம்படுத்தலாகும் மற்றும் பரப்பலாகும் பிற வெளியீடு எதுவும், மற்றும்

(vi) வட்டார மொழிகளுடன் சேர்ந்திருக்கும் அதனுடைய இந்தி வாசகத்தினாலான பணிகளுக்கு கூடுதல் மானியங்கள் வழங்க கருதப்படும்.

3. விண்ணப்படிவம் மற்றும் திட்ட நகல் <u>www.lawmin.nic.in/olwing</u> என்கின்ற எங்களது இணையதளத்தில் கிடைக்கப்பெறும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019 செப்டம்பர் 15-ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்போ கீழ் குறிப்பிட்டுள்ள முகவரியை வந்தடைய வேண்டும்:–

திரு.அனுப் குமார் வர்ஷ்னே,
இணைச் செயலாளர் மற்றும் சட்ட ஆலோசகர்,
சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், சட்டமியற்றுத்துறை,
ஆட்சிமொழிப் பிரிவு,
அறை எண் 725, 7 வது தளம்,
‘A’ பகுதி, சாஸ்திரிபவன்,
புதுதில்லி–110 001.
தொலைபேசி எண். 011– 23386229 ,
தொலை நிகரி எண். 011–23387051.

4. கூடுதல் தகவல் மற்றும் விண்ணப்ப படிவம் பெறுவதற்கும் மேற்சொன்ன முகவரியைத் தொடர்புக் கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**